**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-1 | Date | : 08.08.2024 |
| Case No. | : O.S.59/2021 | Nationality | : Indian |
| Name | : பன்னீர்செல்வம் | Religion | : |
| Father's/Husband's Name | : ரெங்கநாதன் | Age | : 71 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் என்ன பரிகாரம் கோரி யாருக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் சுந்தரேசன், ஜெயலலிதா, சூர்யபிரகாஷ் ஆகியோர் எனது சொத்தில் இடையூறு செய்ததால் அவர்கள் ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் வெளிநாடு வாழ் இந்தியரா என்றால் 2017 ம் ஆண்டு வரை வெளிநாடு வாழ் இந்தியராக இருந்தேன். தற்போது இந்தியர்தான். தாவா சொத்தில் நான் எந்த ஆண்டிலிருந்து விவசாயம் செய்து வருகிறேன் என்றால் 1999 ம் ஆண்டிலிருந்து விவசாயம் செய்து வருகிறேன். நான் வெளிநாட்டில் இருந்தபோது தாவா சொத்தில் யார் விவசாயம் செய்து வந்தது என்றால் எனது மனைவி விவசாயம் செய்து வந்தார். அவ்வாறு எனது மனைவி விவசாயம் செய்து வந்தார் என்ற விவரத்தை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

2. 1ம் பிரதிவாதி எனது உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி

ஜெயலலிதா என்னுடைய உடன்பிறந்த சகோதரர் காலம்சென்ற ஜெயராமனின் மனைவி என்றால் சரிதான். ஜெயலலிதா எனது அக்கா மகள் ஆவார். 3ம் பிரதிவாதி சூர்யபிரகாஷ் என்னுடைய உடன்பிறந்த சகோதரர் காலம்சென்ற ஜெயராமனின் மகன் என்றால் சரிதான். மேற்படி உறவு முறை குறித்து வழக்குரையிலும் எனது நிருபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அதில் உள்ள விவரங்கள் உண்மையல்ல.

**(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது).**

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.